# பத்திரிக்கைச் செய்தி

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தன்னுடைய நிலத்திற்கு பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்திருந்ததாகவும், மனுவை பார்வையிட்ட நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், வீராணம்பாளையம் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அதிகாரி திருமதி.லோகாம்பாள் பட்டா பெயர் மாற்றம் செய்து வழங்குவதற்கு ரூ.4,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 08.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், வீராணம்பாளையம் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அதிகாரி திருமதி.லோகாம்பாள் அவர்கள் உத்தரவுப்படி நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், வீராணம்பாளையம் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக உதவியாளர் திருமதி.கீதா புகார்தாரரிடமிருந்து ரூ.4,000/- கையூட்டாக பெற்றுக் கொண்டார். கையூட்டு பெற்றுக்கொண்டமைக்காக திருமதி.லோகாம்பாள் மற்றும் திருமதி.கீதா ஆகிய இருவரும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

Scanned by CamScanner